## Indian Economy Model Test Questions 4 in Tamil With Answer

1. IBRI குறிப்பது

அ. இந்திய கிராமப்புற தொழில்வங்கி ஆ. இந்திய முதலீட்டு கிராமப்புற வங்கி

**இ. இந்திய தொழில்துறை புதுப்பிக்கும் வங்கி** ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

2. கீழ்க்கண்டவற்றில் சரியான சமன்பாடு எது?

அ. தேசிய வருவாய் - விளைவுள்ள தேவை

ஆ. தேசிய வருவாய் - மொத்த உள்நாட்டு செலவினங்கள்

இ. தேசிய வருவாய் - நுகர்வு மற்றும் முதலீடு

**ஈ. தேசிய வருவாய் - மொத்த தேசிய உற்பத்தி**

3. NABARD என்பது ஒரு

**அ. வங்கி** ஆ. துறை இ. கழகம் ஈ. பிரிவு

4. பயிர்முறை எனப்படுவது

அ. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பயிர் பயிரிடப்படும் நில அளவு

**ஆ. ஒரு பயிருக்கும் மற்றொரு பயிருக்கும் உள்ள பயிரிடப்படும் நிலஅளவு விகிதம்**

இ. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பலவகைப் பயிர்கள் பயிரிடப்படும் நில அளவு

ஈ. இவற்றில் எதுவுமில்லை

5. டேண்டன் குழு அமைக்கப்பட்டதன் நோக்கம்

**அ. பொதுத்துறையை வலுப்படுத்த** ஆ. ஏற்றுமதி அணுகுமுறை

இ. தொழில் உரிமம் ஈ. பொது விநியோக முறை சீர்செய்ய

6. IDRA யின் சரியான விரிவாக்கம் எது?

அ. இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ரீடிரஸ்ஸல் ஆக்ட்

ஆ. இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் அண்டு ரீடிரஸ்ஸல் ஆக்ட்

**இ. இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் அண்டு ரெகுலேஷன் ஆக்ட்**

ஈ . இவற்றில் எதுவுமில்லை

7. ஒரு முன்னேற்றம் அடையாத நாட்டின் தனிப்பண்புகள்

அ. குறைந்த தலையாய உண்மை வருமானம்

ஆ. மூலதன பற்றாக்குறை

இ. அதிக வேலையில்லா திண்டாட்டம்

**ஈ. குறைந்த வருமானம், பற்றாக்குறை மூலதனமும் குறைவாக பயன்படுத்தப்பட்ட மூலவளமும்**

8. கூற்று (A): அதிக அளவில் மறைமுக வேலையின்மை இந்தியாவில் காணப்படுகிறது

காரணம் (R): விவசாயத்துறை நல்லமுறையில் முன்னேறவில்லை

இக்கூற்றுகளில்

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி, ஆனால் (R) தவறு

**ஈ. (A) தவறு, ஆனால் (R) சரி**

9. திட்டமிட்ட முன்னேற்றத்தின் விளைவாக வெளிநாட்டை சார்ந்திருக்கும் இந்தியாவின் நிலை

அ. அதிகரித்துள்ளது **ஆ. குறைந்துள்ளது**

இ. ஒரே மாதிரியுள்ளது ஈ. இதில் எதுவும் இல்லை

10. இந்திய பொருளாதாரத்தின் உலகளாவியது என்பது

அ. இறக்குமதி பதிலிகளை விட்டுவிடுவது

ஆ. வெளிநாட்டு கடனுதவிகளை அதிகரிப்பது

இ. வெளிநாடுகளில் இந்திய வர்த்தக அமைப்புகளை நிறுவுவது

**ஈ. மற்ற நாடுகளுடன் குறைந்தளவு பொருளாதார தடைகளை வைத்துக் கொள்வது**

11. தற்போதுள்ள வரிவிதிப்பில் சீராக சதவீதம் குறைத்தால் மத்திய அரசுக்கு எந்த துறையில் அதிகமான வரி இழப்பு ஏற்படும்?

**அ. கலால் வரி** ஆ. சுங்க வரி

இ. மாநகராட்சி வரி ஈ. வருமான வரி மற்றும் சொத்துவரி

12. இந்தியாவில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் என்று ஆரம்பிக்கப்பட்டது?

அ. 1960 ஆ. 1970 **இ. 1980** ஈ. 1990

13. பசுமை புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட சமயம்

அ. முதலாவது திட்டம் போது ஆ. இரண்டாவது திட்டம் போது

இ. மூன்றாவது திட்டம் போது **ஈ. வருடாந்திர திட்டம் போது**

14. தொழில் பண்ணைகள் நிறுவப்பட்டது, ஏனென்றால்

அ. பெரிய தொழில்களை வளப்படுத்த

ஆ.நகரங்களில் தொழில்களை ஏற்படுத்த

**இ. ஊரக வேலையில்லா திண்டாட்டத்தை குறைக்க**

ஈ.. ஊரகங்களில் தொழில் வளத்தை குறைக்க

15. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் மொத்த பொது செலவில், விவசாயம் மற்றும் விவசாய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு செலவிட்ட பணத்தின் சதவிகிதம்

அ. 10.57 சதவீதம் **ஆ. 12.67 சதவிதம்**

இ. 14.57சதவிதம் ஈ. 15.32 சதவிதம்

16. இந்திய ஏற்றுமதியின் குறைந்த வளர்ச்சிக்கு காரணம்

அ. விவசாய உற்பத்தி குறைவு ஆ. தொழில் உற்பத்தி குறைவு

**இ. மற்ற நாடுகளின் போட்டி** ஈ. எதுவுமில்லை

17. சரியானதைப் பொருத்துக.

| திட்டம் | வாணிபச் சமநிலை |
|---|---|
| அ. முதல் திட்டம் | 200 |
| ஆ, இரண்டாவது திட்டம் | 310 |
| இ. மூன்றாவது திட்டம் | 402 |
| **ஈ. நான்காம் திட்டம்** | **163** |

18. வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் இணைந்தது. ஏனென்றால்

அ. வறுமை வேலையின்மையை கொண்டு வருகிறது

**ஆ. வேலையின்மை வறுமையை கொண்டு வருகிறது**

இ. இரண்டும் தப்பான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளால் வருவது

ஈ. இரண்டும் தொழிற்சாலைகள் இன்மையால் வருவது

19. பணவீக்கத்தின் முக்கிய காரணம்

அ. பற்றாக்குறை நிதி ஆ. பொதுக்கடன்

**இ. அதிகபணம் வெளியிடுவது** ஈ. பொருட்கள் இன்மையால்

20. பொதுத்துறை நிறுவனங்களின் நஷ்டம் ஏற்படக் காரணம்

**அ. குறைந்த திறமை** ஆ. அதிக அளவில் வேலை கொடுத்தது

இ. அதிக சம்பளம் ஈ. எதுவுமில்லை

21. கிராமப்புற வறுமை நிலவக்காரணம்

அ. போதிய வேலைவாய்ப்பின்மை ஆ. உபரி உழைப்போர்

இ. குறைந்த கூலி **ஈ. இவை அனைத்தும்**

22. தனியார் துறையும், பொதுத்துறையும் இணைந்த கூட்டமைப்பு

அ. கூட்டுத்துறை **ஆ. கலப்புத்துறை**

இ. உபதுறை ஈ. கூட்டுறவுத்துறை

23. விருப்ப வேலையின்மை தோன்றுவதன் காரணம்

அ.குறைவான கூலி ஆ. வேலை வாய்ப்பு கிடைக்காத நிலை

**இ. பருவகால மாற்றங்கள்** ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

24. பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு காரணம் என்ன?

அ. நீர்ப்பாசன வசதிகள் **ஆ. அதிக மகசூல் வித்துக்கள்**

இ. இரசாயன உரங்கள் ஈ. அதிக அளவு இயந்திரம்

25. பன்னாட்டு நிறுவனம் என்றால் என்ன?

அ. இரு நாடுகளுக்கு மேலாக இயங்கும் தொழில்

ஆ. அன்னிய முதலீட்டைப் பயன்படுத்தும் ஒரு கம்பெனி

**இ. பன்னாடுகளில் இயங்கிவரும் ஒரு தொழில் நிறுவனம்**

ஈ. பன்னாடுகளில் ஓர் குறிப்பிட்ட பொருளின் ஏகபோக விற்பனை உரிமை பெற்ற கம்பெனி

26. 14 பெரிய வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்ட ஆண்டு

**அ. 1969** ஆ. 1971 இ. 1975 ஈ. 1980

27. 20 அம்ச திட்டத்தை அறிவித்த பிரதமர்

அ. ஜவஹர்லால் நேரு ஆ. லால் பகதூர் சாஸ்திரி

**இ. இந்திரா காந்தி** ஈ. ராஜீவ் காந்தி

28. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்

அ. 1990-1995 ஆ.1991-1996 **இ.1997-2002** ஈ.1993-1998

29. இந்தியாவில் அரசுக்கு அதிகப்படியான வருமானம் ஈட்டித் தருவது

அ. நேரடி வரி **ஆ. சுங்கத் தீர்வை**

இ. விற்பனை வரி ஈ. ரயில் கட்டணம்

30. பாரத ஸ்டேட் வங்கி எந்த ஆண்டு தோன்றியது?

அ. 1947 ஆ. 1958 **இ. 1955** ஈ. 1979

31. இந்தியாவில் உள்ள மொத்த பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை

அ. 14 **ஆ. 20** இ. 28 ஈ. 32

32. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி பணி துவக்கிய வருடம்

அ. 1950 **ஆ . 1964** இ. 1972 ஈ. 1981

33. பன்னாட்டு வாணிபத்தினை கண்காணிக்கும் அமைப்பு

அ. உலகவங்கி ஆ. பன்னாட்டு செலவாணி நிதி

**இ. உலக வாணிப அமைப்பு** ஈ. பன்னாட்டு நிதி அமைப்பு

34. கீழே காண்பவற்றுள் மறைமுக வரி எது?

அ . அன்பளிப்பு வரி ஆ. கார்ப்பரேஷன் வரி

இ. சொத்துவரி **ஈ. சுங்கத்தீர்வை**

35. இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் பயன்படுத்தும் போக்குவரத்து

அ. இரயில் பாதைகள் **ஆ. சாலைகள்**

இ.ஆகாய வழிகள் ஈ. நீர்வழிகள்

36. இந்தியாவின் பொருளாதார திட்டத்தினை தோற்றுவித்த முன்னொடி யார்?

அ. மோதிலால் நேரு ஆ. ஜவஹர்லால் நேரு

இ. வல்லபாய் படேல் **ஈ. விஸ்வேஸ்வரய்யா**

37. தனியார் துறையில் மிகப்பெரிய தொழிற்சாலையாக விளங்குவது

**அ. டாடா இரும்பு எஃகு கம்பெனி**

ஆ. டாடா எஞ்னியரிங் அண்ட் லோகோமோடிவ் கம்பெனி

இ. சென்கரி கப்பல் கட்டும் கம்பெனி

ஈ. லார்சன் அண்ட் டூப்ரோ லிமிடெட்

38. பாரத ஸ்டேட் வங்கியைத் தவிர இந்தியாவில் உள்ள நாட்டுடையாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை

அ. 14 ஆ. 17 **இ. 20** ஈ. 24

39. கூட்டாட்சி நிதிநிர்வாகம் என்பது பின்வருபவற்றை குறிக்கிறது

அ. மத்திய அரசின் நிதி காரியங்கள்

ஆ. மாநில அரசுகளின் நிதிக் காரியங்கள்

இ. உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி காரியங்கள்

**ஈ. மத்திய-மாநில அரசுகளின் நிதித் தொடர்பான காரியங்கள்**

40. ICICI வங்கியுடன் இணைவதற்கு கீழ்க்கண்ட வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கிஅனுமதி அளித்துள்ளது

**அ. பேங்க் ஆஃப் இந்தியா** ஆ. குளோபல் ட்ரஸ்ட் வங்கி

இ.செஞ்சுரியன் வங்கி ஈ. பேங்க் ஆப் இந்தியா

41. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட துறை

**அ.விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்** ஆ. பெரிய தொழிற்சாலைகள்

இ. வேலையின்மை மற்றும் வறுமை ஈ. தொலைதொடர்பு மற்றும் கல்வி

42. ஐ.டி.பி.ஐ. என்பது ஒரு

**அ. வங்கி** ஆ. வாரியம் இ. குழு ஈ. மையம்

43. நிதிக்கொள்கையின் தொடர்பு

**அ. பொதுவருவாய், செலவுடன்** ஆ. மக்கள் தொகையுடன்

இ. பணவெளியீட்டுடன் ஈ. ஏற்றுமதி, இறக்குமதியுடன்

44. இந்திய தேசிய வருமானத்தில் விவசாயத்தின் பங்கு தோராயமாக

அ. 50% **ஆ. 38%** இ. 75% ஈ. 25%

45. தனிநபர் கணக்கு துவங்கப்பட முடியாத வங்கி

அ. கூட்டுறவு வங்கி ஆ. வரையறுக்கப்பட்ட வங்கி

**இ. இந்திய ரிசர்வ் வங்கி** ஈ. இவற்றுள் எதுவுமில்லை

46. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்

அ. 1947-52 ஆ. 1950-55 **இ. 1951-56** ஈ. 1952-57

47. இந்தியாவில் ஒரு ரூபாய் பணத்தாள் வெளியிடும் அதிகாரம் பெற்றவர் யார்?

அ. இந்திய ரிசர்வ் வங்கி **ஆ. மத்திய நிதி அமைச்சகம்**

இ. பாரத அரசு வங்கி ஈ. இந்திய ஜனாதிபதி

48. அட்டவணையில் அடங்கிய வங்கி என்பது

அ. ரூபாய் 100 கோடி வைப்பாக கொண்ட வங்கி

**ஆ. இந்திய ரிசர்வ் வங்கியின் இரண்டம் பட்டியலில் அடங்கிய வங்கி**

இ.100 கிளைகளுக்கு மேல் உடைய வங்கி

ஈ. தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கான வங்கி

49. தமிழ்நாட்டில் விவசாய வருமான வரி என்பது

அ. மாநிலஅரசு ஆ. நகர சபைகள்

இ. பஞ்சாயத்துகள் **ஈ. இவற்றுள் எதுவுமில்லை**

***தமிழ்நாட்டில் விவசாய வருமான வரி இல்லை***

50. ஒரு தொழில் துறையிலிருந்து கிடைக்கும் பல்வேறு வகையான வருவாய்களில் பின்வருவதில் ஒன்று நிச்சயமற்றது

அ. வாரம் ஆ. கூலி இ. வட்டி **ஈ. இலாபம்**

51. இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

**அ. 1935** ஆ. 1948 இ. 1956 ஈ. 1960

52. முதல் ஐந்தாண்டுத் திட்டம் பின்வரும் எந்த ஆண்டில் துவங்கப்பட்டது?

அ. 1948 **ஆ. 1951** இ.1956 ஈ. 1960

53. ஜவஹர் ரோஜ்கார் யோஜனா என்ற திட்டத்தின் நோக்கம்

அ. கிராம பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்

ஆ. நகர்புறத்தில் குடியேறடியவர்களுக்கு வீடுகட்டும் பயிற்சி அளித்தல்

இ.சிற்றளவு உற்பத்தி சாலைகளை ஊக்குவித்தல்

**ஈ. கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்**

54. புதிய காசுகளை மையமாகக் கொண்ட நாணயத்திட்டம் பின்வரும் ஆண்டில் இந்தியாவில் அமுலுக்கு வந்தது

அ. 1935 ஆ. 1947 **இ. 1955** ஈ. 1960

55. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்______

அ. 1995-2000 ஆ. 1992-1997 **இ. 1997-2002** ஈ. 1999-2004

56. பண அங்காடி

**அ. குறுகிய காலத்தோடு தொடர்புடையது**

ஆ. நீண்ட காலத்தோடு தொடர்புடையது

இ. “பெர்ஸ்பெக்டிவ்” காலத் தொடர்புடையது

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

57. ஏற்றுமதி இறக்குமதி வங்கி நிறுவப்பட்ட ஆண்டு

அ.1980 **ஆ. 1982** இ. 1981 ஈ. 1989

58. விவசாய மற்றும் கிராம முன்னேற்றத்திற்காக நபார்டு வங்கி எந்த வருடத்தில் நிறுவப்பட்டது?

அ. 1979 ஆ. 1980 இ. 1981 **ஈ. 1982**

59. ஒரு ரூபாய் நோட்டு, நாணயம் மற்றும் அதற்கு கீழ் மதிப்புள்ள நாணயங்களை வெளியிடுவது

அ. இந்திய ரிசர்வ் வங்கி ஆ. பாரத ஸ்டேட் வங்கி

**இ. நிதி அமைச்சகம்** ஈ. இந்திய அரசு

60. இந்தியப் பொருளாதாரத்தின் முதன்மை துறையானது

**அ. விவசாயம்** ஆ. தொழில்

இ. அந்நிய வாணிபம் ஈ. வங்கித்துறை

61. பாரலல்(இணை) பொருளாதாரம் என்பது

**அ. சட்டத்திற்கு எதிரான பொருளாதாரம்** ஆ. அருகிலுள்ள பொருளாதாரம்

இ. சமமான பொருளாதாரம் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

62. திட்டமிட்ட பொருளாதாரத்தில்

அ. கட்டுப்பாடுகள் காணப்படும் ஆ. கட்டுப்பாடுகள் காணப்படாது

**இ. கட்டுப்பாடுகள் வரையறை செய்யப்படும்** ஈ. இவற்றுள் எதுவுமில்லை

63. எந்த ஆண்டின் தொழில் கொள்கைத் தீர்மானம் இந்தியாவின் பொருளாதார சாசனம் என அழைக்கப்படுகிறது?

**அ. 1948** ஆ. 1956 இ. 1987 ஈ. 1991

64. இந்தியப் பொருளாதாரம்

அ. வளர்ச்சி அடைந்த ஒன்று ஆ. வளர்ச்சி வாய்ப்பற்ற ஒன்று

இ. வளர்ச்சி குன்றிய ஒன்று **ஈ. இவற்றுள் எதுவுமில்லை**

65. கீழ்க்கண்டவற்றுள் தீவிர வேளாண்மையின் முக்கியமான சிறப்பு அம்சங்கள் யாவை?

1. குறைந்த மூலதனம் 2. அதிக மக்களடர்த்தி

3. சிறிய நில உடைமை 4. இயந்திரத்திற்கு அதிக முக்கியத்துவம்

இவற்றில்

அ. 1 மட்டும் 2 சரியானவை **ஆ. 1,2 மற்றும் 3 சரியானவை**

இ. 3 மற்றும் 4 சரியானவை ஈ. 1 மற்றும் 4 சரியானவை

66. இந்தியாவைப் போன்ற வளர்ச்சி குன்றிய ஒரு நாட்டின் மிக முக்கிய குணாதிசயம்

**அ. நாட்டின் வளங்களை போதிய அளவு பயன்படுத்தாமை**

ஆ. உழைப்பை சுரண்டுதல்

இ. முதலை தவறாகப் பயன்படுத்துதல்

ஈ. தொழில் முனைவு தன்மை இல்லாமை

67. கறுப்பு பணம் என்பது

அ. கறுப்பு சந்தை பேரங்கள் மூலமாக குவித்த வணம்

**ஆ. வரி ஏய்த்தலினால் குவித்துள்ள பணம்**

இ. சர்வாதீன வாணிபத்தின் வாயிலாக குவிந்த பணம்

ஈ. இவை அனைத்தையும் உள்ளடக்கியது

68. பாதகமான வாணிபநிலை என்பது பின்வரும் ஒருநிலையை குறிக்கிறது

அ. ஏற்றுமதிகள், இறக்குமதிகளை விட அதிகம்

**ஆ. இறக்குமதிகள், ஏற்றுமதிகளை விட அதிகம்**

இ. ஏற்றுமதியும், இறக்குமதியும் ஒன்றுக்கொன்று சமம்

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

69. வளர்வீத வரிவிதிப்பு முறை என்பது

**அ. வருமானம் அதிகரிக்கும்போது வரிவிகிதமும் அதிகரித்தல்**

ஆ. வருமானம் அதிகரிக்கும்போது வரிவிகிதம் குறையும்

இ. வருமானம் அதிகரிக்கும்போது வரிவிகிதம் நிலையாக இருத்தல்

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

70. பற்றாக்குறை நிதியாக்கம் என்பது

அ. பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் வருவாயை விட கூடுதல் செலவு செய்வது

**ஆ. ஓர் அரசு தனது வரவினங்களை விட கூடுதலாக செலவு செய்வது**

இ. மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மிகுதியாக முன்பணம் கொடுத்தல்

ஈ. இவை அனைத்தும் அடங்கியது

71. 1998இல் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்

அ. இராஜா செல்லையா ஆ. மன்மோகன் சிங்

இ. பிமல்ஜலான் **ஈ. அமிர்தியாசென்**

72. பணவீக்கத்தின் பொழுது விலைகள்

**அ.அதிகரிக்கும்** ஆ. வீழ்ச்சியடையும்

இ. தேக்கநிலையில் இருக்கும் ஈ. விரைவில் மாறாது

73. பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாளைய பெயர்

அ. யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா ஆ. பீப்பிள்ஸ் பாங்க் ஆஃப் இந்தியா

**இ. இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா** ஈ. இந்தியன் பாங்க்

74. தமிழ்நாட்டில் செயலாற்றில் கொண்டிருக்கும் பாண்டியன் கிராம வங்கி என்பது ஒர்

அ. கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆ. கூட்டுறவு வங்கி

இ. தனியார் துறை வங்கி **ஈ. வட்டார கிராமப்புற வங்கி**

75. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையலுவலகம் பின்வரும் நகரத்தில் உள்ளது

அ. புது டில்லி **ஆ. மும்பாய்**

இ. கொல்கத்தா ஈ. சண்டிகர்

76. “டிபென்சர்” என்ற கடன் பத்திரம் பெறுவது

அ. லாப்பங்கீடு ஆ. தரவு இ. கழிவு **ஈ. வட்டி**

77. பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்

அ. ஆல்பிரட் மார்ஷல் **ஆ. ஆடம் ஸ்மித்**

இ. ரிக்கார்டோ ஈ. கார்ல் மார்க்ஸ்

78. மனித மூலதன உருவாக்கம் என்பது

அ. மக்கள் தொகை அதிகரிப்பு ஆ. மூலதன கருவிகள் அதிகரிப்பு

**இ. மக்கள் அறிவு மற்றும் திறன் அதிகரிப்பு** ஈ. இளைஞர் மக்கள் தொகை அதிகரிப்பு

79. வங்கிவிகிதம் என்பது

**அ. வணிக வங்கிகள் கடன் கொடுக்கும் வட்டி விகிதம்**

ஆ. வங்கிகள் தங்கள் கடன் பொறுப்புகளை சரிகட்ட விதிக்கும் வட்டிவிகிதம்

இ. வணிக வங்கிகள் கூட்டுரவு வங்கிகளுக்கு கடன் அளிக்கும் விகிதம்

ஈ. மைய வங்கி உண்டியல்களை மறுகழிவு செய்ய விதிக்கும் வட்டி விகிதம்

80. மாவட்ட தொழில் மையங்கள் எந்த ஆண்டின் கொள்கைப்படி அமைக்கப்பட்டன?

அ. 1956 ஆ. 1973 இ. 1977 **ஈ. 1980**

81. கூட்டுத்துறை என்ற கொள்கை அறிவிக்கப்பட்ட ஆண்டு

அ.1956 ஆ. 1970 **இ.1973** ஈ. 1980

82. தற்பொழுது இந்தியாவில் ஒவ்வொரு வங்கி கிளையும் சராசரியாக எத்தனை பேர்களுக்கு சேவியாற்றுகின்றன?

அ. 12,000 ஆ. 8,500 **இ.15,000** ஈ. 64,000

83. கார்ல் மார்க்ஸ் எழுதிய புத்தகத்தின் தலைப்பு

அ. நாடுகளின் செல்வம் **ஆ. மூலதனம்**

இ. மேலாண்மை நிர்வாகம் ஈ. பொருளியல் கோட்பாடுகள்

84. வறுமைக்கோட்டின் கீழே உள்ளவர்கள் குறைந்த விழுக்காட்டில் உள்ள மாநிலம்

அ. கேரளா ஆ. மஹாராஷ்டிரம் **இ. பஞ்சாப்** ஈ. குஜராத்

85. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியில் மிகுந்த முக்கியக் காரணியாக உள்ளது எது?

**அ. முதலாக்க வளர்ச்சி** ஆ. தொழில் நுட்ப வளர்ச்சி

இ. வேளாண்மை வளர்ச்சி ஈ. அயல்நாட்டுத் தொழில் முனைவு

86. NABARD நிறுவப்பட்ட வருடம்

அ. 1981 **ஆ. 1982** இ. 1983 ஈ. 1984

87. பின்வருவனவற்றுள் நகர்ப்புற பகுதிகளுடன் தொடர்புடையது எது?

அ. JRY **ஆ. NRY** இ. NREP ஈ. TRYSEM

88. IRDP என்பது

அ. இந்திய ஊரக வளர்ச்சித் திட்டம் **ஆ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

இ. இந்திய ஊரக வளர்ச்சிக் கொள்கை ஈ.இவற்றுள் எதுவுமில்லை

89. முதலாளித்துவ பொருளாதாரத்தின் முக்கிய அனுகூலம்

அ. வாணிப சூழல் இன்மை ஆ. சமமான வருவாய் மற்றும் வேலைவாய்ப்பு

இ. வேலையின்மைக்கு முடிவு **ஈ. தனியார் தொழிலுக்கு ஊக்கம்**

90. தேசிய கடன்களின் மீதான வட்டி கீழ்க்கண்ட ஒன்றில் சேர்க்கப்படும்

அ. நிகர தேசிய உற்பத்தி **ஆ. மொத்த தேசிய உற்பத்தி**

இ. தனிநபர் வருமானம் ஈ. தேசிய வருமானம்

91. கதர் மற்றும் கிராமத் தொழில் குழு அமைக்கப்பட்ட திட்டகாலம்

**அ. இரண்டாவது** ஆ. மூன்றாவது

இ. நான்காவது ஈ. ஐந்தாவது

92. தொழிற்சாலை சட்டத்தின் முக்கிய நோக்கம்

அ.சுகாதாரம் மற்றும் நலம் ஆ. வேலை நேரம்

இ. ஆண்டு விடுப்பு **ஈ. இவை அனைத்தும்**

93. கலப்பு பொருளாதரம்

அ. அரசுத்துறை

ஆ. தனியார்துறை

**இ. அரசுத்துறையும், தனியார் துறையும், சேர்ந்து இயங்குதல்**

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

94. 'வங்கி வீதக் கொள்கை' என்பது

அ. வணிக வங்கிகள் அளிக்கும் கடன் மீது பெறும் வட்டிவீதம்

ஆ. கூட்டுறவு வங்கிகள் அளிக்கும் கடன் மீது பெறும் வட்டிவீதம்

**இ. ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடன்மீது பெறும் வட்டிவீதம்**

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

95. சில்லறை ரொக்க ஏட்டில்பதிவு செய்வது

அ. சொத்து வாங்குவதில் செலவுகள்

ஆ. பொழுது போக்கு செலவுகள்

இ. சம்பளம் கொடுத்தது

**ஈ. சிறு தொகையை அடிக்கடி செலவு செய்தது**

96. இந்தியா அதிகபட்ச அந்நிய நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் நாடு

**அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

ஆ. சீனா

இ.ஜப்பான்

ஈ. ஜெர்மனி

97. வழக்கமாக ஒரு கம்பெனியின் முதல் இயக்குநர்களை நியமிக்கிறவர்கள்

அ. பங்குதாரர்கள்

ஆ. இயக்குநர்கள்

இ. கடனீந்தோர்கள்

**ஈ. தோற்றுவிப்பாளர்கள்**

98. "பொது மற்றும் தொழில் மேலாண்மை" (General and Industrial Management) என்ற புகழ் வாய்ந்த புத்தகத்தை எழுதியவர் யார்?

**அ.ஹென்றிஃபேயல்**

ஆ. எஃப்டபிள்யூ டெய்லர்

இ. எல்டன் மேயோ

ஈ. பீட்டர் ட்ரக்கர்

99. மாறுபட்ட வட்டி வீதத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு அளிக்கப்படும் வட்டி வீதம் என்ன?

அ. 10% ஆ. 15% **இ.6%** ஈ. 4%

100. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டதின் முக்கிய நோக்கம்

அ. கனரக தொழிற்சாலைகளை மேம்படுத்த

**ஆ. வறுமையை ஒழிப்பதற்கு**

இ. வேலையில்லா திண்டாட்டத்தை அகற்றுவதற்கு

ஈ. வேலையில்லா திண்டாட்டம் மற்றும் வறுமையை அகற்றுவதற்கு